இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 218 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – பங்குனி 05 – புதன்கிழமை 19 மார்ச் 2025 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 218 : Thiruvalluvar Year - 2056 - Panguni 05 - Wednesday 19 March 2025 - Trichy ★★ 12 Pages ₹ 5.00


## மக்கள் நம்பிக்கையை இழந்தவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம்!

# பேரவைத் தலைவராக மட்டுமல்ல; பண்பாட்டின் தலைவராகவும் திகழ்கிறார் அப்பாவு!

## சட்டப்பேரவையில் பேரவைத் தலைவர் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, மார்ச் 19 –**

**சட்டப்பேரவையில் பேரவைத் தலைவர் மீது அ.தி.மு.க.வினர் கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றிய போது "அப்பாவு அவர்கள் பேரவைத் தலைவராக மட்டுமல்ல; பண்பாட்டின் தலைவராகவும் திகழ்கிறார்" என்று பாராட்டினார்.**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.3.2025) சட்டமன்றப் பேரவையில், அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்டு வந்த பேரவைத் தலைவர் அவர்களை பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானத்தின் மீதான விவாதத்தின் போது உரையாற்றினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.3.2025) சட்டமன்றப் பேரவையில், அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்டு வந்த பேரவைத் தலைவர் அவர்களை பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானத்தின் மீதான விவாதத்தின் போது ஆற்றிய உரை வருமாறு :-

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே!

அ.தி.மு.க. உறுப்பினர்களால் மு.அப்பாவு அவர்களை பேரவைத் தலைவர் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம் தற்போது விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

மக்கள் நம்பிக்கையை இழந்தவர்களால் இப்படி ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டிருப்பதைப் பார்த்து மக்களே நகைப்பார்கள் என்பதுதான் உண்மை.

கடந்த 2017ஆம் ஆண்டு, இதே போன்ற ஒருதீர்மானம் வந்தது.

"தமிழக சட்டமன்ற வரலாறு நூற்றாண்டு விழாவினை இன்னும் நான்கு ஆண்டுகளில் காணப் போகிறது" எனக் கூறித் தொடங்கினேன்.

இன்றைக்கு நூற்றாண்டு விழாவினைக் கண்டு 4 ஆண்டுகள் ஆகிறது எனக் கூறித்தொடங்குகிறேன். இப்பேரவை நூற்றாண்டு விழா கண்டுள்ளது.

இங்கே நமக்கெல்லாம் பாடமாக நிற்கிறாரே, தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டு உள்ளது.

### படமாக இல்லை – பாடமாக நிற்கிறார் தலைவர் கலைஞர்!

'யாரும் யார் மீதும் விமர்சனம் வைக்கலாம், ஆனால் என்றாவது ஒருநாள் அவரை நேரில் சந்திக்க வேண்டும் என்பதைமனதில்வைத்துவிமர்சியுங்கள்' என்று சொன்னவர் தலைவர் கலைஞர் அவர்கள். அதனால்தான் அவரை படமாக இல்லை, பாடமாக நிற்கிறார் என்று நான் குறிப்பிட்டேன்.

அவரது நூற்றாண்டு கொண்டாடும் வேளையில், இப்பேரவையின் தலைவராகப் பணியாற்றும் வாய்ப்பை மு.அப்பாவு அவர்கள் பெற்றிருக்கிறார்.

2017ஆம் ஆண்டு என்னால் இதுபோன்ற ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டதை எண்ணி நான் அன்றைக்கு வருந்தினேன் என்று என் உரையில் பதிவு செய்துள்ளேன்.

ஆனால் இத்தீர்மானம் இன்றைக்குக் கொண்டு வரப்பட்டதன் மூலம் கடந்த பேரவைகளின் செயல்பாடுகள், அன்றைய பேரவைத் தலைவர் ஜனநாயகத்தை மதியாது நடந்து கொண்ட முறைகளையும் பற்றி இங்கேயுள்ள நம்முடைய பேரவை முன்னவர் உள்ளிட்ட பல்வேறு உறுப்பினர்களுக்கும், ஏன், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் கூட நன்றாகத் தெரியும். நான் மீண்டும் அதைச் சொல்ல விரும்பவில்லை.

ஆனால் அவற்றோடு தற்போதைய பேரவைத் தலைவரின் செயல்பாடுகளை ஒப்பீடு செய்து, நம்முடைய பேரவைத் தலைவர் எவ்வாறு நடுநிலையோடு செயல்படுகிறார் என்பதை மக்கள் புரிந்து கொள்ளும் வாய்ப்பாக இந்த விவாதத்தைக் கருதுகிறேன்.

> **பேரவைத் தலைவர், ஜனநாயகக் கொள்கைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். மற்றவர்கள் மனம் வருந்தாத அளவில், தன்னுடைய நடவடிக்கைகளை அமைத்துக் கொள்பவர். நேர்மையாக கருத்துக்களை ஆணித்தரமாக முன்வைக்கும் பண்பு கொண்டவர். அவரது நடுநிலையோடு நிற்கும் நேர்மைத் திறனும், அனைவரிடமும் சிரித்த முகத்தோடு பழகும் பாங்கும் என்னைக் கவர்ந்த காரணத்தால்தான் அவரை இப்பதவிக்கு நான் முன்மொழிந்தேன்.**

2006-2011 காலகட்டத்தில் நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களும் இந்த அவையில் உறுப்பினராக இருந்துள்ளார். அப்போது நான் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சராக அப்போது பணியாற்றினேன். அப்போதிலிருந்தே எனக்கு அவரை நன்றாகத் தெரியும்.

### ஜனநாயக கொள்கைகளில் ஈடுபாடு கொண்டவர்!

பேரவைத் தலைவர், ஜனநாயகக் கொள்கைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். மற்றவர்கள் மனம் வருந்தாத அளவில், தன்னுடைய நடவடிக்கைகளை அமைத்துக் கொள்பவர். நேர்மையாக கருத்துக்களை ஆணித்தரமாக முன்வைக்கும் பண்பு கொண்டவர். அவரது நடுநிலையோடு நிற்கும் நேர்மைத் திறனும், அனைவரிடமும் சிரித்த முகத்தோடு பழகும் பாங்கும் என்னைக் கவர்ந்த காரணத்தால்தான் அவரை இப்பதவிக்கு நான் முன்மொழிந்தேன்.

ஆசிரியராக இருந்து அரசியலுக்கு வந்தவர் நம்முடைய அப்பாவு அவர்கள். கனிவானவர் ஆனால் அதேநேரத்தில் கண்டிப்பானவர். இவை இரண்டுமே பேரவைக்குத் தேவை என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வீர்கள் என்று நான் நினைக்கிறேன். இவை இல்லாவிட்டால் அவையை கண்ணியத்துடனும் கட்டுப்பாட்டுடனும் நடத்த இயலாது.

இந்த அவையில், என்னுடைய தலையீடோ, அமைச்சர்களின் தலையீடோ, பேரவை நடவடிக்கைகளில் இல்லாத வகையில் தான் பேரவைத் தலைவர் அப்பாவு அவர்கள் நடந்து வருகிறார்கள்.

கடந்த காலங்களில் நடைபெற்றது போல் அல்லாமல், ஜனநாயக அமைப்பின் பிரதிநிதிகளான சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றே என நினைத்து செயலாற்றி வருகிறார்கள்.

எதிர்க்கட்சி உறுப்பினர்களிடம் பாசம், பற்று கொண்டு செயல்படுபவர் நம்முடைய பேரவைத் தலைவர்அவர்கள் என்பதை மனச்சாட்சியுடன் சிந்திப்பவர்கள் ஒப்புக் கொள்வார்கள்.

பேரவைத் தலைவருக்கு அருகில் வந்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அன்போடு பேசிச் செல்வதை இந்தப் பேரவை உறுப்பினர்கள் அனைவரும் பார்த்த காட்சி தான். சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கண்ஜாடையாக அவரோடு பேசி தங்கள் எண்ணத்தை குறிப்பால் உணர்த்துவதையும் உங்களில் பலரும் பார்த்திருக்கலாம்.

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

## பேரவைத் தலைவருக்கு எதிராக

# அ.தி.மு.க. கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் படுதோல்வி!

**சென்னை, மார்ச் 19 –**

**தமிழ்நாடு சட்டப்பேரவையில் சபாநாயகர் அப்பாவு அவர்களுக்கு எதிராக அ.தி.மு.க. கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் குரல் வாக்கெடுப்பு மற்றும் டிவிஷன் வாக்கெடுப்பில் தோல்வி அடைந்தது.**

தமிழ்நாடு சட்டப்பேரவையில் சபாநாயகர் அப்பாவு அவர்களுக்கு எதிராக அ.தி.மு.க. சார்பில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. சட்டப்பேரவையில் அ.தி.மு.க. எம்.எல்.ஏக்களை பேச அனுமதிப்பது இல்லை, அவர்கள் பேசும்போது சபாநாயகர் அப்பாவு அடிக்கடி குறுக்கீடு செய்கிறார், ஆளுங்கட்சி அமைச்சர்கள், எம்.எல்.ஏக்களிடம் எழுப்பப்படும் கேள்விகளுக்கு சபாநாயகரே பதில் கூறுகிறார், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுவதை நேரலையில் ஒளிபரப்புவது இல்லை, சபாநாயகர் ஒருதலைபட்சமாக செயல்படுகிறார் என்பது உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து இந்த தீர்மானத்தை சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆர்.பி.உதயகுமார் கொண்டு வந்தார். எஸ்.பி.வேலுமணி வழிமொழிந்தார்.

சட்டப்பேரவை விதிகளின்படி, இந்த தீர்மானத்தை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள 35 எம்.எல்.ஏக்கள் ஆதரவளிக்க வேண்டும் என்று கூறப்பட்டது. அப்போது அ.தி.மு.க. எம்.எல்.ஏ. செங்கோட்டையனும் எழுந்து நின்று தனது ஆதரவைத் தெரிவித்தார். அதேபோல் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வமும் அ.தி.மு.க. கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் சபாநாயகர் அப்பாவு அவர்களுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து, அவையிலிருந்து அப்பாவு அவர்கள் தனது அறைக்குச் சென்றார். இதையடுத்து துணை சபா நாயகர் கு.பிச்சாண்டி அவையை வழிநடத்தினார்.

இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்து சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி சட்டப்பேரவையில் பேசுகையில், பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்து பேசினார்.

அதனையடுத்து நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை எதிர்த்து காங்கிரஸ் கு.செல்வப் பெருந்தகை, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சிந்தனைச் செல்வன், மார்க்சிஸ்ட் நாகைமாலி,இந்திய கம்யூனிஸ்ட் ட்டி. இராமச்சந்திரன், ம.தி.மு.க. சதன் திருமலைக்குமார், மனிதநேய மக்கள் கட்சி ஜவாஹிருல்லா, கொங்கு நாடு தேசியக்கட்சி ஈஸ்வரன், தமிழ்நாடு வாழ்வுரிமைக் கட்சி வேல்முருகன் ஆகியோர் பேசினர்.

தீர்மானத்துக்கு எதிராக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் ஜனநாயக முறைப்படியும், பேரவையை நேர்மையாக ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என்று பாராமல் சமமாக பேரவையை வழி நடத்திச் செல்வதை பல்வேறு விளக்கங்களுடன் உரை நிகழ்த்தினார்.

### தீர்மானம் தோல்வி!

தொடர்ந்து குரல் வாக்கெடுப்பின் மூலம் இந்த தீர்மானம் நடத்தப்பட்டது. தீர்மானத்துக்கு தி.மு.க. கூட்டணிக் கட்சிகளான காங்கிரஸ், ம.தி.மு.க., கம்யூனிஸ்ட் கட்சிகள், வி.சி.க., எம்.எல்.ஏக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இந்த விவாதத்தில், பா.ஜ.க., பா.ம.க. உறுப்பினர்கள் கலந்துகொள்ளவில்லை. குரல் வாக்கெடுப்பில் இந்த தீர்மானம் தோல்வி அடைந்ததாக பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி அறிவித்தார்.

### டிவிஷன் முறை எண்ணிக்கை!

குரல் வாக்கெடுப்பை அடுத்து டிவிஷன் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி கோரிக்கை விடுத்தார். எதிர்க்கட்சித் தலைவரின் கோரிக்கையை ஏற்று, சபாநாயகர் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு டிவிஷன் முறையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இது எண்ணிக்கை முறையிலான வாக்கெடுப்பு ஆகும். சட்டப்பேரவையில் மொத்தம் 6 டிவிஷன்கள் உள்ளன. டிவிஷன் வாரியாக இந்த தீர்மானத்தை எத்தனை பேர் ஆதரிக்கிறார்கள், எதிர்க்கிறார்கள் என்ற எண்ணிக்கை அடிப்படையில், முடிவுகள் அறிவிக்கப்படும். அதன்படி சட்டப்பேரவை செயலர் முன்நின்று இந்த டிவிஷன் வாக்கெடுப்பை நடத்தினார். டிவிஷன் முறையிலும் சபாநாயகர் மீது அ.தி.மு.க. கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வி அடைந்தது.

சபாநாயகர் மீது அ.தி.மு.க. கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு 63 பேர் ஆதரவளித்திருந்த நிலையில், 154 பேர் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர். இதனால், சட்டப்பேரவையில் அ.தி.மு.க. கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வி அடைந்தது.

இதையடுத்து பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் தனது இருக்கைக்கு வந்து அவையை நடத்தினார்.